# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

தொகுதி - 2

FATIMA COLLEGE
MADURAI



தமிழ் உயராய்வு மையம்

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)**

மதுரை - 18

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்<br>தொகுதி 2 |
| நுவல் பொருள் | : | கிறித்தவ இலக்கியக் கட்டுரைகள் |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் ஆ.பாப்பி கமலாபாய், துறைத்தலைவர்<br>முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி<br>முனைவர் இரா. டயானா கிறிஸ்டி<br>முனைவர் இரா. ஏஞ்சல்<br>திருமதி பி. திவ்யா<br>திருமதி டே. ஆனி மரிய ஜான்சி |
| பதிப்பு | : | முதற் பதிப்பு, செப்டம்பர் 2018 |
| மொழி | : | தமிழ் |
| உரிமை | : | தமிழ் உயராய்வு மையம்,<br>பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)<br>மதுரை - 18. |
| பக்கங்கள் | : | |
| அச்சிட்டோர் | : | ரேகா பிரிண்டர்ஸ் |
| நூல் அளவு | : | டெம்மி |
| நூல் வெளியீடு | : | தமிழ் உயராய்வு மையம்,<br>பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)<br>மதுரை - 18 |
| விலை | : | Rs. 300/- |

| | | |
|---|---|---|
| Name of the Book | : | Kirithava Ilakia Veliyil Manitha Mathipedugal<br>(Part I Research Articles) |
| Print | : | First print - September 2018 |
| Language | : | Tamil |
| Copy Right | : | Tamil Research Centre, Fatima College (Autonomous),<br>Madurai -18. |
| Pages | : | |
| Press | : | REGA Printers |
| Released by | : | Tamil Research Centre,<br>Fatima College (Autonomous), Madurai -18. |
| Price | : | Rs 300/- |
| ISBN | : | 978-93-87865-06-8 |

# பொருளடக்கம்


| வ. எண் | பெயர் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | அக்ஸிலியா மேரி, அ. | திருவிவிலியம் காட்டும் மனித மதிப்பீடுகள் | 1 |
| 2. | திரு. அடிசன், ஆ. | திருக்குறள் - திருவிவிலியம் காட்டும் அறச்சிந்தனைகள் ஓர் இணைநிலை ஆய்வு. | 5 |
| 3. | திரு. அந்தோணி சுரேஷ், ஞா. | திருவிவிலியம் காட்டும் நட்பு | 9 |
| 4. | திரு. ஆரோக்கியதாஸ், தா. | திருவிவிலியம் மத்தேயு நற்செய்தியில் வாழ்வியல் கூறுகள் | 12 |
| 5. | திருமதி இந்திராணி இளங்கோ | உவமைக் கதைகளில் மனித மாண்புகள் | 17 |
| 6. | திரு. இளங்கோ | நாலடியாரும் விவிலிய நீதிமொழிகளும் ஒரு பார்வை | 20 |
| 7. | திரு. எட்வர்ட், தே. | திருவிவிலியத்தில் மனிதநேயம் | 22 |
| 8. | முனைவர் அருள்சகோ. எழிலரசி, மி.சு. | சைவசித்தாந்தத்தில் விவிலியக் கருத்துக்கள் | 27 |
| 9. | ஏஞ்சலின் பெராக்கா கிறிஸ்டோபெல் | தமிழ் இலக்கியமும் விவிலியமும் | 32 |
| 10. | முனைவர் காந்திதுரை, சு. | அன்பின் வழியது உயிர் நிலை... | 36 |
| 11. | செல்வி கேத்ரின் சித்ரா, அ. | அன்பே உங்களுக்கு ஆணிவேரும் அடித்தளமும்... | 39 |
| 12. | திருமதி சாந்திராணி, அ. | திருவிவிலியம் காட்டும் மனித மதிப்பீடுகள் | 41 |
| 13. | முனைவர் தனலெட்சுமி, த. | திருக்குறள்-விவிலியம் காட்டும் அறம் - ஓர் ஒப்பீடு | 45 |
| 14. | செல்வி திவ்யா, செ. | ரூத் காட்டும் மனித மாண்புகள் | 50 |
| 15. | செல்வி பரமேஸ்வரி, செ. | மத்தேயு காட்டும் மனித மதிப்பீடுகள் | 52 |
| 16. | திரு. பிரான்சிஸ், அ. | விவிலியம் வெளிப்படுத்தும் தமிழர் வாழ்வியல் | 55 |
| 17. | திருமதி பிரியாலதா, செ. | வேதாகமத்தில் பெண்களின் சிறப்பு | 59 |
| 18. | திருமதி பெனிற்றா மெர்லின் கிரேஸ், பெ. | திருவிவிலியத்தில் அன்பு | 62 |
| 19. | முனைவர் அருள்தந்தை மணிவளன், சி., சே.ச. | கிறித்தவ இலக்கியங்களில் மனித மதிப்பீடுகள் | 67 |
| 20. | திரு. மதுரைவீரன், ஆ. | திருவிவிலியத்தில் அறநெறிக் கோட்பாடுகள் | 76 |
| 21. | மெரின் ஜெலின்டா, ஜெ. | புதிய ஏற்பாட்டு நற்செய்தி நூல்களில் உவமைகள் | 79 |
| 22. | மைக்கேல் சைனி, பி. | மாயப்பலுகுதலும் யதார்த்தப் பகிர்தலும் | 82 |
| 23. | திரு. ரசல் ஜெயபதி, மா. | திருவிவிலியம் முன்னிறுத்தும் “விவேகப் பெண்மணிகள்” | 85 |
| 24. | முனைவர் லயோலா சூலியட் மேரி, பா. | திருவிவிலியமும் திருக்குறளும் உணத்தும் வாழ்க்கை நெறிகள் | 89 |
| 25. | செல்வி லிஜி, ரா. | திருவிவிலிய நாலடியார் கருத்துக்கள் - ஓர் ஒப்பீடு | 94 |
| 26. | முனைவர் வளர்மதி, அ. | இயேசுவும் இயேசு பெருமான் தந்த உபதேசங்களும் | 97 |
| 27. | முனைவர் விஜயசாந்தி, மு. | விவிலிய நீதிமொழிகள் காட்டும் பெண்களின் மாண்புகள் | 102 |
| 28. | திருமதி ஹெலன், ச. | திருவிவிலியத்தில் மனிதநேயம் | 105 |
| 29. | திரு. ஜான்சன், போ. | கதை சொல்லல் மரபில் விவிலிய விழுமியங்கள் | 108 |

# திருவிவிலியமும் திருக்குறளும் உணர்த்தும் வாழ்க்கைநெறிகள்

**முனைவர் பா. லயோலா சூலியட் மேரி,**
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி, மதுரை.

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தான் அறிந்தோ அறியாமலோ ஏதேனும் ஒரு சமயத்தைச் சார்ந்தே வாழ்கின்றான். அது பரம்பரையாகப் பின்பற்றப்படும் சமயமாகவோ அல்லது இடையில் ஏற்படும் சமயமாற்றங்களாகவோ இருக்கலாம். அதனடிப்படையில் சமீபத்தில் ஏற்படுகின்ற மிகப்பெரிய மாறுதல் எனில் கிறிஸ்தவ சமயத்தைப் பிறர் சார்ந்து வாழ முற்படுவதே ஆகும். அதற்கான காரணங்கள் பல இருக்கலாம். அது தனிப்பட்ட மக்களின் விருப்பமாகவோ அல்லது கிறித்தவர்களின் புனித நூலான திருவிவிலியத்தில் மனிதனின் வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை விதமான நெறிகளும் உள்ளதும் காரணங்களாக அமையலாம். அதிலும் குறிப்பாகச் சீராக்கின் ஞானம் எனும் இணைத்திருமுறை கிறித்தவர்கள் வாழ்வில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**இல்வாழ்க்கை**

இந்தியாவின் வருங்காலத் தூண்களாக விளங்கக்கூடியவர்கள் இன்றைய இளைய சமுதாயத்தினர். இவர்கள் நல்லவராக நடந்தாலன்றி சமுதாயத்தை முன்னேற்றப்பாதைக்கு இட்டுச்செல்ல இயலாது. ஒவ்வொரு குழந்தைக்கும் முதல் பள்ளியாக விளங்குவது அவர்களது இல்லமே ஆகும். குழந்தைகள் அங்கிருந்துதான் நல்ல செயல்களையும் தீய செயல்களையும் கற்றுக்கொள்கின்றனர். நம் எல்லோருக்கும் தந்தையாகத் திகழும் ஆண்டவராகிய இறைவன் குழந்தைகளை நோக்கிக் கை நீட்டி அழைக்கிறார். அவர்,

> **“குழந்தைகளே, உங்கள் தந்தையாகிய**
> **எனக்குச் செவிசாயுங்கள்.**
> **நான் கூறுவதன்படி செயல்படுங்கள்.**
> **அப்பொழுது காப்பாற்றப்படுவீர்கள்” (சீராக். 3:1)**

என்ற இறைவசனங்கள் வழி அவர் நம் குழந்தைகளைக் காக்கக் காத்திருப்பதை உணர்த்துகின்றது.

குடும்பத்தை நிர்வகிக்கும் தந்தையையும், பிள்ளைகளை நெறிப்படுத்தும் தாயையும் மதித்து நடக்க வேண்டியது பிள்ளைகளின் கடமை என்கிறார் இறைவன்.

> **“தந்தையரை மதிப்போர் பாவங்களுக்குக்**
> **கழுவாய் தேடிக் கொள்கின்றனர்.” (சீராக். 3:3)**

> **“குழந்தாய், உன் தந்தையின் முதுமையில்**
> **அவருக்கு உதவு; அவரது வாழ்நாளெல்லாம்**
> **அவர் உள்ளத்தைப் புண்படுத்தாதே.**
> **அவரது அறிவாற்றல் குறைந்தாலும்**
> **பொறுமையைக் கடைப்பிடி; நீ இளமை**
> **மிடுக்கில் இருப்பதால் அவரை இகழாதே” (சீராக். 3:12-13)**

> **“அன்னையரை மேன்மைப்படுத்துவோர் செல்வம்**
> **திரட்டி வைப்போர்க்கு ஒப்பாவர்.” (சீராக். 3:4)**

என்ற இறைவசனங்கள் தாய் தந்தையரைப் பாதுகாக்கவேண்டியது பிள்ளைகளின் கடமை என்றும், அவ்வாறு பெற்றோரை மதிப்போர் பற்றிக் குறிப்பிடுகையில்,